உ

ஓம் சக்தி துணை

# துர்க்கா மஞ்சரி


''முக்கண்ணியை தொழுவார்க்கு ஒருதீங்கில்லை''

அபிராமி பட்டர்

விக்கிரம வருடம் புரட்டாதி 30 வள்ளுவர் ஆண்டு 2031 (15-10-2000)

வெளியீட்டாளர்கள்

அருள்மிகு துர்காதேவி இந்து தேவஸ்தானம்




மலர்: 1

இதழ்: 3

7468 EDMONDS STREET BURNABY,BC V3N 1B2

TEL: 604-521-3472



பாலும் தெளிதேனும் பாகும் பருப்புமிவை
நாலும் கலந்து உனக்கு நான் தருவேன் -கோலம்செய்
துங்கக் கரிமுகத்துத் தூமணியே நீஎனக்குச்
சங்கத் தமிழ் மூன்றுந் தா.

# ஆலயமும் நாமும்

அம்பிகை அடியார்களே

மலரும் முன்றாவது இதழ் மூலம் எமது ஆலய செயற்திட்டங்களையும், அம்பிகை அடியார்களின் சில ஆக்கங்களுடனும் ஆலயத்தில் அடுத்த மூன்று மாதகாலத்துக்கு நடைபெறவிருக்கும் பூசைகள், அபிசேகங்கள் என்பவற்றுடன் இந்த இதழை தங்கள் கரங்களில் சமர்பணம் செய்வதில் பெருமகிழ்ச்சியடைகிறோம். கடந்த இதழை எமது குருவான சிவாயசுப்பிரமுனிய சுவாமிகள் வெளியிட்டுவைத்தார். இந்த மாமுனிவர் முதல் முறை வந்து போய் மூன்று மாதங்களில் அன்னைக்கு சொந்தமாக காணிகட்டிடத்துடன் ஆலயம் அமைத்தோம். இரண்டாவது முறை வந்த சுவாமிகளின் திருப்பாதம் பட்டதும் ஆலயம் வருடாந்த திருவிழா உற்சவம் எந்தவித விக்கினங்களுமில்லாமல் நடைபெற்றதோடு குறுகிய காலத்தில் தேர்நிர்மானிக்கப்பட்டு இரதம் வலம் வந்து பக்தி பூர்வமாக திருவிழா நடைபெற்றது நீங்கள் யாவரும் அறிந்ததே.

''கோவில் இல்லாத ஊரில் குடியிருக்க வேண்டாம்'' என்பது எமது மூதாதையரின் பழமொழி. இந்த பிரிட்டிஷ் கொலம்பியாவில் வாழும் தமிழ் மக்களுக்கென்று வழிபாட்டுத்தலம் இல்லையே என்ற அங்கலாயப்பு எமது மக்களிடையே இருந்து வந்தது. அந்த அங்கலாய்ப்பை எமது அன்னை தீரத்துவைதுள்ளார். இப்போது எமக்கென்று ஒரு ஆலயமும், ஆலயத்தில் ஒழுங்கு முறை தவறாது பூசைகளும், அபிசேகங்களும் நடைபெறுகிறது. இவைமட்டுமல்ல எமது இளைய தலைமுறையினரை ஊக்குவிக்குமுகமாக தமிழ், இந்துசமய வகுப்புக்களும் ஒவ்வொரு ஞாயிற்றுக்கிழைகளிலும் பகல் பத்து மணிமுதல் பகல் பன்னிரண்டு மணிவரை நடைபெறுகிறது. பெற்றோர்கள் தங்கள் பிள்ளைகளை இந்த வகுப்புக்களுக்கு அனுப்பி தமிழ்,சமய அறிவை ஊக்குவிக்குமாறு கேட்டுக்கொள்ளுகிறோம்.

அன்னைக்கென்று ஆலயகட்டிடம் வாங்கி ஒருவருடம் பூர்தியாகிவிட்ட இந்தநிலையில் நமது கடமைகள் முடிந்துவிட்டது என்று இருக்க முடியாது. எதிர்காலத்தில் நாம் செய்ய வேண்டிய செயற்திட்டங்கள் பொறுப்புக்கள் உண்டு. அவற்றில் முக்கியமானது வங்கி கடனும், பொதுமக்களிடம் பெற்றுக்கொண்ட வட்டியில்லாகடனுமேயாகும். இதுவரையில் ஆலயத்தில் நூற்று அறுபது அங்கத்தவர்கள் சேர்ந்துள்ளனர். அடுத்து வரும் ஆண்டில் இது இரட்டிப்பு அடைய வேண்டும் என்பதே எமது குறிக்கோள் இது வரையில் அங்கத்தவர்களாக சேராது யாராவது இருந்தால் தயவு செய்து அங்கத்தவர்களாக சேர்ந்து அம்பிகை ஆலய திருப்பணிக்கு உதவும்படி வேண்டுகிறோம். எமது ஆலய காணிபங்கீடு பற்றியும் நீங்கள் அறிந்திருப்பீர்கள் பங்கொன்று இருநாற்றி ஐம்பது டொலர்களாக பொது மக்கள் பங்கிட்டு எடுக்கிறார்கள், இதுவரையில் காணிப்பங்கு எடுக்காதவர்கள் தாங்களும் தங்கள் பங்களிப்பை செய்து திருப்பணிக்கு உதவுமாறு கேட்டுக்கொள்ளுகிறோம். ஆலயத்தில் திருப்பணிகள் செய்வதற்கு தொண்டர்கள் தேவைபடுகிறது அடியார்கள் தயவு செய்து ஆலய நிர்வாக சபையினருடன் தொடர்பு கொள்ளவும்.

அம்பிகை அடியார்களே துர்க்கா மஞ்சரிக்கு இந்து சமயம் தொடர்பான கதைகள், மற்றும் சமய ஆக்கங்கள் கொடுக்க விரும்புவோர் தமது ஆக்கங்களை நிர்வாக சபையினரிடம் கொடுக்கும்படியும் மஞ்சரி சம்பந்தமான உங்கள் அபிப்பிராயங்களையும் கேட்டுக்கொள்ளுகிறோம். நல்லது அடியார்களே அடுத்த இதழில் சந்திக்கும்வரை...............

நிர்வாக சபையினர்

## ஆலய பூசை நேரங்கள்

தினம் தோறும் மதியநேரப்பூசை பகல் 12.00 மணிக்கு நடைபெறும்.

தினம் தோறும் இரவு நேரப்பூசை இரவு 8.00 மணிக்கு நடைபெறும்.

## ஆலய விசேட விரதங்கள்

ஐப்பசி மாதம் முதல் மார்கழி மாதம் வரை அனனையின் ஆலயத்தில் நடைபெறும் விரதங்கள் விழாக்கள் பற்றிய விபரங்கள் கீழே தருகிறோம். இந்த நாட்களில் அடியார்கள் அனைவரும் வருகைதந்து அனனையின் அருள்பெற்றுய்யுமாறு வேண்டுகிறோம். விசேட தினங்களில் மாலை நேரப்பூசை 7.30 மணிக்கே ஆரம்பமாகும் என்பதையும் அன்புடன் தெரிவித்து கொள்ளுகிறோம். அடியார்கள் விரத நாட்களை பொறுப்பேற்று அன்னையின் அருள் பெற்றுய்ய விரும்பும் அடியார்களை நிர்வாகத்துடன் முன்கூட்டியே தொடர்பு கொள்ள வேண்டுகிறோம்.

### முக்கிய விரத தினங்கள்:

### ஐப்பசி மாதம்

**10.07.2000 - சனி - கேதார கௌரி விரத ஆரம்பம்**

அன்னை பராசக்தி சிவபிரானை வேண்டி நோன்பிருந்த பயனாக, சிவனுடன் *சரிபாதியாகி சிவனும் சக்தியும்* இணைந்த அர்தநாதீஸ்வர வடிவத்தைப் பெற்றமகிமைக்குரிய அவ்விரதத்தை ஆண், பெண் இருபாலாரும் கடைபிடிக்கலாம். 21 வருடங்களுக்கு கடைபிடிக்க வேண்டிய இவ்விரதத்தை ஆகக்குறைந்தது 7 வருடங்களாவது கடைப்பிடிப்பவர்களுக்கு திருமணப்பேறு, மகிழ்சியான இல்லற வாழ்வு, குழைந்தைப்பேறு என்பன இவ்விரதத்தின் பலன்களாக அமையும்.

**10.12.2000 - வியாழன் - பௌர்ணமீ நவதீபப் பூசை.**

**10.14.2000 - சனி - நவக்கிரக சாந்திப் பூசை (புரட்டாதி கடைசிச் சனி )**
**சனிதோசமுள்ள அடியார்கள் பரிகாரம் வேண்டி செய்கின்ற சாந்திப் பூசை.**

**10.20.2000 - வெள்ளி - ஐப்பசி வெள்ளி விரதம் ஆரம்பம்**

**10.25.2000 - புதன் - தீபாவளிதிருநாள்**

தான் பெற்ற தவ வலிமையினால், தானே உலகில் பெரியவன், வலியவன் என்ற ஆணவம் கொண்டு அனைவரையும் துன்புறுத்திய நரகாசுரனை, காத்தற்கடவுளாகிய மகாவிஷ்ணு அழித்தொழித்த போது, இறக்கும் தறுவாயில் நல்லறிவு பெற்ற நரகாசுரன், தான் இறக்கும் இந்த நாளை மற்றவர்கள் மகிழ்வுடன் கொண்டாடவேண்டும் என்றும், அவர்கள் வேண்டுவதை கொடுத்தருள வேண்டும் என்றும் மாகாவிஷ்ணுவிடம் வரம் கேட்டதாக புராணங்கள் கூறுகின்கின்றன.
அஞ்ஞான இருளும், ஆணவமும் அழிந்து, அன்பும் தெய்வத்தின் அருளும் மேலோங்கும் திருநாள் இதுவாகும்.

10.26.2000 - வியாழன் - கேதார கௌரி விரதநோன்பு இறுதிநாள்.

10.27.2000 - வெள்ளி - கந்த சஷ்டி விரதம் ஆரம்பம்

முத்தமிழ் தெய்வம் முருகனுக்குரிய விரதங்களில் மிகச்சிறப்பானது கந்தசஷ்டி விரதமாகும். ஆறு நாட்கள் கடைப்பிடிக்கப்படும் இந்தநோன்பின் ஆரம்ப நாளன்று தர்ப்பை அணிந்து, காப்புக்கட்டி சங்கற்பம் செய்து இப்புனித நோன்பைக் கடைப்பிடிக்கும் அடியார்கள் ஏழாம் நாள் காலை பாரணைப் பூசை கண்டு விரதத்தை பூர்த்தி செய்வர்.

தவத்தினால் தாம் பெற்ற வலிமையை தவறாகப் பாவித்து தேவர்களையும், மனிதர்களையும், துன்புறுத்திய சூரன், சிங்கன், தராகன் ஆகிய மூன்று அசுரர்களையும் அழிக்க, முழுமுதற் தெய்வமான சிவபிரான் தனது சக்தியை முருகப்பெருமானாக, காத்திகை மைந்தனாக அவதாரம் செய்ய வைத்தார். கந்தசஷ்டியின் ஆறாம் நாள் முருகப்பெருமான் மூன்று அசுரர்களையும் அழித்ததை “ சூரன் போர்” ஆக காணுகிறோம். சூரனை சங்காரம் செய்த கருணைத் தெய்வமான கந்தன் அவனை இரு கூறுகளாக்கி, தனது சேவற் கொடியாகவும் மயில்வாகனமாகவும் ஆக்கி அருள் செய்ததாக புராணங்கள் கூறுகின்றன. ஆணவம், கன்மம், மாயை ஆகிய மும்மலங்களையும் அழித்து ஆன்மாக்களுக்கு முத்தி இன்பம் தரும் தத்துவத்தை பின்னணியாகக் கொண்டது கந்தசஷ்டி விரதமாகும்.

11.01.2000 - புதன் - கந்தசஷ்டி ஆறாம் நாள் - சூரன் போர்

11.02.2000 - வியாழன் பாரணைப் பூசை காலை 6.30 மணிக்கு நடைபெற்று

மாலை முருகப்பெருமானுக்கு திருக்கல்யாண வைபவமும் நடை பெறும்.

11.10.2000 - ஐப்பசி கடைசி வெள்ளி

11.16.2000 - ஐயப்பன் மண்டலகால ஆரமபம்.

11.31.2000 - விநாயகசஷ்டி விரதம்.

12.09.2000 - திருக்கார்திகை விரதம் குமராலய தீபம்.

12.10.2000 - சர்வாலய தீபம், பூரணை விரதம், நவதீபப் பூசை.

12.26.2000 - ஐயப்பன் மண்டலகாலப் பூர்த்தி.

12.30.2000 - திருவெம்பாவை பூசை ஆரம்பம்.

*எமது உள்ளக வலை (**inter net**) விலாசம்:* ***(http://clubs.yahoo.com/clubs/aruldurga)***

# பஜனை செய்வோம்

இறைவன் இசைவடிவானவன். ஏழிசைகளும் இறைவனிடத்திலிருந்து பிறந்தன என்று கூறபட்டுள்ளது. ''பாட்டும்நானே பாவமும் நானே'' என்று விறகு கட்டையில் வீணைமீட்டி, இசைபாடி பாண்டிநாட்டில் திருவிளையாடல் புரிந்தான் இறைவன். இசைபிரியனான இறைவனை பாமாலை சூட்டி வழிபட்டார்கள். நம் அடியார்கள், ஆழ்வார்கள் இசைக்கு மயங்காத உயிர்களேயில்லை. இயல், இசை, நாடகம் என்ற முத்தமிழுக்கும் உயிர் நாடியாக இருப்பதும் இசைதான் நம்முடைய மனதில் எழும் உணர்ச்சிகளை மென்மையாக வெளிப்படுத்தும் முறை இசையாகும். நாம் ஒருபாடலை தனித்துப் பாடுவதிலும் பார்க்க பலர் சேர்ந்து பாடும்போது எங்களை அறியாமலே உற்சாகம் பிறக்கிறது. மனமகிழ்ச்சி ஏற்படுகின்றது. எமது ஆலயங்களிலே கூட்டுவழிபாடும், பஜனை செய்வதும் தொன்று தொட்டு நடந்து வரும் ஒரு அரிய நிகழ்வுகளாகும். பஜனை வழிபாடு இறைவனுக்கு மிகமிக பிரியமானது. நன்கு பாடும் திறமையுள்ள ஒருவர் இறைநாமாவளிகளையும், பாடல்களையும் சொல்லிக்கொடுக்க ஏனையோர் சேர்ந்து பாடுவது மிகச்சிறந்தது. நாம் பாடும்போது பாடல்களின் கருத்தைப் புரிந்து இனிமையை இரசித்துப்பாடவேண்டும். பாடக்கூடிய தன்மையில்லாதவரும் பஜனையில் பங்குபற்றும் போது தன்னையறியாமலே பாடுவர். வீண் பேச்சுக்கும் வேறு சிந்தனைக்கும் இடம் கொடுக்காமல் பஜனை இறைவழிபாட்டில் மனதை லயிக்கச் செய்கின்றது. நல்ல பக்கவாத்தியங்கள் பஜனைக்கு மெருகூட்டுகின்றன. பாடுபவர்களுக்கு உற்சாகத்தை தருகின்றன. அவைகள் இல்லாவிடத்து. எமது கைகளினால் இசைக்கேற்றவாறு சத்தமாக தட்டிப்பாடுவதை இறைவன் மிகவும் விரும்புகிறன்.

பஜனை வழிபாட்டில் முக்கியமாகச் சிறுவர்களைப் பங்குபற்றச் செய்யவேண்டும். வருங்காலச் சிறார்கள் சமயப்பற்றும் இறைவழிபாடும் உள்ளவர்களாக வளர வேண்டுமென்று ஒவ்வொரு பெற்றோரும் கவனமெடுக்க வேண்டும். ஆடலும் நீச்சலும் சிறுவர்களுக்கு எத்தனை முக்கியமோ அத்தனைக்கும் மேலானது ஆன்மீகப்பயிற்சி என்பதைப் பெற்றோர் உணர்ந்து, எமது ஆலயத்தில் நடக்கும் சமய வகுப்புக்கள். பஜனை வழிபாடுகளில் பிள்ளைகளை ஈடுபடச் செய்ய வேண்டும். பஜனை பற்றி விசேடமாக குறிப்பிடுவதென்றால் சாயி பஜனை, ஐயப்ப பஜனைகளைக் கேட்கும் போது எம்மை மெய்மறக்கச் செய்கின்றது. உள்ளம் உருகுகிறது. அப்படியான ஒரு பஜனைக் குழு நம் ஆலயத்திற்கு மிகமிக அவசியம்.

இயந்திர வேகத்தில் வாழ்ந்து கொண்டிருக்கும் எம்மவருக்கு ஆலயத்திற்கு வருவதற்கே அவகாசம் கிடைப்பதில்லை அப்படிக் கிடைக்கும் அரிய சந்தர்ப்பத்தை அவப்பொழுதாக்காமல், இறைவன் நாமத்தைப் போற்றும் பஜனையில் ஈடுபடுவதுடன். தீப ஆராதனைகளைக் காணும் போது ஆன்ம திருப்தி ஏற்படுகின்றது.''கற்றதனால் ஆயபயனென்கொல் வாலறிவன் நற்றாள் தொழாரெனின்'' திருக்குறள்

இராசம்மா தியாகராஜ

# கவாய் புனித யாத்திரை

புனித யாத்திரை பல மேற்கொள்ளலாம். ஆனால் அதன் பலன் யாத்திரிகன் எவ்வளவு தூரத்திற்கு மனத்திருப்தி அடைந்தான் என்பதே மிக முக்கியம் ஆகும். அந்தமட்டில் கவாய் தீவு ஒன்றில் அமைந்துள்ள எமது குருதேவர் சற்குரு சுப்பிரமுனிய சுவாமி அவர்களின் ஆச்சிரமத்திற்கு சென்று வந்த எனது அனுபவம் என்றும் மறக்க முடியாத ஒன்றாகும். அந்த அளவிற்கு மனதிலே ஒரு பூரண திருப்தி, ஏன் கைலாயத்திற்கு சென்று வந்த திருப்தி என்றாலும் மிகை ஆகாது.

கவாய் தீவுகளில் குவை ஒரு சிறிய தீவு. இந்த அழகிய தீவில்தான் ஆச்சிரமம் அமைந்துள்ளது. லகு விமான நிலையத்தில் இருந்து நான்கு மைல் தூரத்தில் கிராமிய சூழலில் ஐம்பது ஏக்கர் நிலப்பரப்பில் சுவாமிகளின் ஆச்சிரமம் அமைந்துள்ளது. மலைச் சுற்றாடல்களும். ஆச்சிரமத்தின் நிலப்பரப்பின் ஊடே தனது பயணத்தை தொடரும் வயாலு ஆற்றின் அழகும் ஆச்சிரமத்திற்கு மேலும் மகிமை ஊட்டுகின்றது.

எமது கிராமங்களில் உள்ளதுபோல அழகிய சிவன் கோயில் ஒன்று. அது குருதேவரினால் இருபது வருடங்களுக்குமுன்பு கட்டப்பட்டது. கோவிலுக்கு பக்கத்தில் ஒரு சிறிய கேணி, கோயில் வாயிலில் ஒரு பெரிய நந்தி, என்ன அழகு ! இங்கே ஆறு காலப் பூசைகளும் ஆகம முறைப்படி நடக்கின்றன. நாம் சென்றபொழுது குருபூரணிமா அதாவது குருமார்களை கௌரவிக்கும் தினங்கள் என்பதால் இக்கோவிலில் பூசைகள் மிகவும் சிறப்பாக நடந்தன. ஐக்கிய அமெரிக்காவின் வேறு மாநிலங்களில் இருந்தும் கனடா, ஆஸ்திரேலியா, மலேசியா, சிங்கப்பூர்.மொரிசியஸ், இலண்டன் போன்ற நாடுகளில் இருந்தும் பல அடியார்கள் குருபூரணிமா தினத்தை கொண்டாடுவதற்காக வந்திருந்தார்கள். ஏழு நாட்கள் மிக சிறப்பாக இவ்விழா நடைபெற்றது.

எமது இந்து சமய புராணங்களில் குறிப்பிட்டது போல உருவ வழிபாடு, தியானமுறை, சந்நியாச வாழ்க்கை எல்லாவற்றையும் இந்த ஆச்சிரமத்தில் பார்க்க கூடியதாக இருக்கின்றது. சந்நியாசிகள், சுவாமிகள், துறவிகள், இளம் சாதுக்கள், இப்படியாக குருதேவரோடு முப்பது பேர் இந்த ஆச்சிரமத்தில் இருக்கிறார்கள் இவர்கள் எல்லோரும் யோகக்கலை, வேதாந்தம், சித்தாந்தம், வேத மந்திரங்கள் கோயில் பூசை முறைகள், அக்கினி யாகங்கள் போன்றவற்றில் நன்கு பயிற்றப்பட்டு உள்ளார்கள்.

குருபூர்ணிமா தினங்களில் காலை ஆறு மணி முதல், மாலை ஆறு மணி வரை சிவன் கோயில் விசேட பூசைகளோடு குருதேவரின் அறிவுரைகள், ஆச்சிரமத்திலுள்ள சுவாமிகளுடன் கலந்து உரையாடல், தியானப் பயிற்சிகள் அக்கினி யாகங்கள் (இதை ஹோமம் என்றும் சொல்லுவார்கள்) இவையாவற்றிலும் பங்கு பற்றியது ஒரு பாக்கியமாக கருதுகிறேன். அதுமட்டுமா, கடைசி நாள் ஆச்சிரமத்தில் நடந்த ஒரு சிறிய கலை நிகழ்ச்சியில் மிகவும் குறிப்பிடத்தக்க இரண்டு நிகழ்சிகள் இளம்

சந்நியாசிகளால் நடாத்தி காண்பிக்கப்பட்ட யோகக்கலையும், தியானம் பற்றிய சிறிய நாடகமும் எல்லோர்மனதையும் மிகவும் கவருவதாக இருந்தது.

சில வருடங்களுக்கு முன்பு குருதேவர் தியானத்தில் இருந்த போது இறைவனின் அழகிய காட்சி அவருக்கு தோன்றிய இடத்தில் தற்போது 15 மிலியன் அமெரிக்க டொலர்களில் ஒரு கோவில் கட்டப்பட்டு வருகின்றது எத்தனையோ நூற்றாண்டுகள் இருக்ககூடிய முறையில் இறைவன் கோயிலுக்கு அத்திவாரம் போட்டு முடிந்துவிட்டது மற்ற திருப்பணி வேலைகள் யாவும் இந்தியாவிலுள்ள பெங்களூரில் கருங்கல்லுகளினால் கோவில் கோபுரங்கள் மற்றும் யாவும் செதுக்கப்பட்டு கப்பல் மூலம் இவ்விடம் கொண்டு வந்து பொருத்துவார்கள். இன்னும் நான்கு அல்லது ஐந்து வருடங்களில் இறைவன் ஆலயம் பூர்த்தியாகிவிடும் என்பது குருதேவரின் நம்பிக்கை. அத்துடன் பிள்ளையார், முருகன் ஆலயங்கள் உருவாக்குவதற்கும் இடங்கள் தயாரிக்க பட்டு வருகின்றது. இந்த ஆச்சிரமத்திற்கு வரும் பக்தர்களில் பலரில் உள்ள சிறப்பு அம்சம் என்னவென்றால் வெள்ளை இனத்தவர்களாக இருந்தும் நமது இந்து சமயத்தையும், தமிழ் கலாச்சரத்தையும், பின்பற்றி உடை, உணவு முறை, ஏன் அவர்களது பெயர்களைக் கூட நமது தமிழ் பெயர்களாக மாற்றி எமது சைவசமயத்திற்கும், கலாச்சாரத்திற்கும் மேலும் சிறப்புற சேவை செய்வதை பார்க்கும் போது எனதுள்ளம் மிகவும் புல்லரிக்கின்றது இந்த ஆச்சிரமமும் இதில் அமைந்துள்ள கோவில்களும் எதிர்காலத்தில் மேற்கத்திய, வடஅமெரிக்க நாடுகளில் ஒரு சிறந்த யாத்திரை தலமாக அமையும் என்பதில் எதுவித ஐயமும் இல்லை.

எனக்கு கிடைத்த இன்னெரு பாக்கியம் 114 வயதுடை தமிழ்நாட்டை சேர்ந்த நியுயோர்க் நகரில் வசிக்கும் பூவா சுவாமி என்பவரை இங்கே சந்தித்து உரையாடி சில ஆன்மிக தத்துவவிளக்கங்களை அறிந்தது இவர் ஒரு சந்நியாசி மட்டுமல்ல வேதாந்தியும், யோகக்கலை விற்பன்னரும் ஆவர். குருதேவருக்கும் பல காலம் இவரை தெரியும் மொத்ததில் எனது இந்த யாத்திரை மனச்சாந்தியை கொடுத்தது.

செந்தில்வேல்

# அறிவுக்கு விருந்து

1. என்னவாக இப்போதிருக்கிறோம் என்பதை விட என்னவாக நாளை பேசப்படுவோம் என்று திட்டமிட்டு இயங்குவது தான் சரியான வாழ்க்கை முறை.

2 அனுபவத்துக்கு முன் ஏட்டுச்சுரைக்காய் தூசு. நல்ல குணம், முழு ஈடுபாடு, எடுத்த தொழிலில் உறுதி, பணிவு, தைரியம் இந்த ஐந்தும் இருந்தால் படிப்பறிவு கைகொடுக்கும்.

3. நமக்குள் இருக்கிற மனசுக்கு மிஞ்சின மந்திரக்கோல் எதுவுமில்லை. என்னால் முடியும் என்ற உத்தமமான இலட்சியம் மனசுக்குள் பதிந்துவிட்டால். நிச்சயம் நாம் நினைக்கிற இடத்தை அடைந்து விட முடியும்.

4. வலிமை உடல் பலத்திலிருந்து வருவதல்ல. வெல்ல முடியாத மனஉறுதியிலிருந்து வருவதே.

5. மனம் கொண்டதே மாளிகை. நரகத்தைச் சொர்க்கமாக்கிக் காட்டுவதும். சொர்க்கத்தை நரகமாக்கிக் காட்டுவதும் அதுவே

6. அமைதியான மனமே உங்களின் மிக முக்கியமான மூலதனம். அதுவே எல்லா வெற்றிகளையும் கொண்டு வந்து தரும்.

7. ஒழுக்கம் மரம் போன்றது. புகழ் அதன் நிழல். நாம் நிழலைப் பார்த்துமரம் என்று எண்ணி விடுகிறோம். மரம் தான் நிலையானது.அதன் நிழல் அல்ல.

நீங்கள் பிறர்மீது கருணை காட்டும் இனிய குணத்தை உடையவர் எனறால் அது கடவுள் உங்களுக்கு அளித்துள்ள அன்புப் பரிசாகும்.

9. வாழ்க்கையில் மிகமிக ஆழமானது உண்மையாய் இருப்பது, சிந்திப்பது, உண்மையாகச் செயல்படுவது, உண்மையுடன் உதவுவது, உண்மையுடன் நடந்து கொள்வது, இந்தக் குணங்கள் தான் நம் வாழ்க்கையைச் சமப்படுத்தி. மிகப்பெரிய அளவில் முன்னேற்றத்தை நோக்கி அழைத்துச் செல்கிறது.

10 ஒவ்வொரு மனிதனும் உன்னத நிலையை அடைய முயலவேண்டும். மற்றவர்களைக் கீழே வீழ்த்தி அல்ல. (தன்னைத்தானே மேலே உயர்த்துவதன் மூலம்)

11. குழந்தைகளை நல்லவர்களாக்கச் சிறந்த வழி அவர்களை மகிழ்ச்சியாக வைத்திருப்பதே.

12. மனிதசமுதாயத்தை மாற்றியமைப்பது பற்றி ஒவ்வொருவரும் பேசுவார்கள். தன்னைத்தானே மாற்றிக் கொள்வது பற்றி ஒருவரும் நினைப்பதில்லை.

13. பத்திரிகைகளும் புத்தகங்களும் ஓரளவிற்கே உதவி செய்யக்கூடியவை மற்றவை அனுபவ வாயிலாக அறிய வேண்டியவை. கைகாட்டி மரம் வழியைச் சுட்டிக்காட்டுமே தவிர நாம் போக வேண்டிய இடத்திற்கு நம்மைக் கொண்டு சேர்க்காதது.

14. ஒரு பெரிய மனிதர். தன்னுடைய பெருந்தன்மையைச் சிறிய மனிதர்களை நடத்துவதன் மூலம் வெளியில் காண்பிக்கிறார்.

15. ஆயிரம் முறை சிந்தனை செய்யுங்கள் ஆனால் ஒரு முறை முடிவெடுங்கள்

(தொகுப்பு இணுவைக்குமரன்)

# நவராத்திரி

உலகில் மிகத் தொன்மையான இந்து மதம் எமது மதம் என்பதில் நாம் எல்லோரும் பெருமைகொள்ளவேண்டும். இற்றைக்கு ஐய்யாயிரம் ஆண்டுகட்கு முற்பட்ட சிந்துவெளி நாகரிகத்தின் அடித்தளமாக விளங்கியது எமது இந்து மதம் என்றால் மிகையாகாது. தொன்று தொட்டு, இன்றுவரை இந்துக்களின் வாழ்க்கையோடு விரதங்களும். விழாக்களும் ஒன்றிணைந்தே காணப்படுகிறது. நாகரிகத்திலும் பண்பாட்டிலும் ஒழுக்கநெறியிலும் தலைசிறந்து விளங்கும் எங்கள் இந்து மதத்தின் மரபுகளைப் பேணி, எங்கள் வாழ்வை சீராக அமைப்பதற்கு. கலங்கரை விளக்கங்களாக திகழ்பவை அருள்மழை பொழியும் ஆலயங்களே. அந்த வகையில் இங்குள்ள எமது பெரியோர்கள் செய்த தவப்பயனால் எமக்குக்கிடைத்த ஒளிவிளக்கு அன்னை துர்க்கையின் ஆலயமே.

உலகங்கள் அனைத்தையும் படைத்து, காத்து, அழித்து, அனைத்தும் தானேயாகி நிற்கும் பரம் பொருளை சிவனாகவும், சத்தியாகவும் போற்றி வழிபடும் இந்து மதத்தில் சிவனுக்கு உகந்த சிவராத்திரியும், சக்திக்கு உகந்த நவராத்திரியும் சிறப்பான விரதங்களாகும் இவை விரதங்களாக மட்டுமல்ல, எமது கலை, பண்பாடு, பாரம்பரியங்களை வெளிப்படுத்தும் விழாக்களாகவும் கொண்டாடப்படுகின்றது. மனித வாழ்வின் அடிப்படைத் தேவைகளான உணவு, உடை, உறைவிடம் ஆகிய மூன்றையும் தேடிக்கொள்ள ஒருவனுக்கு தேவையானது செல்வம் இந்தச் செல்வத்தைத் தேடிக்கொள்ள தொழில் தேவை. தொழிலைத் தேடிக்கொள்ள நல்ல அறிவு தேவை அந்த அறிவைத் தேடிக்கொள்ள கல்வி தேவை. கல்வியினால் பெற்ற செல்வத்தைப் பேணிக்காக்க வீரம் தேவை. ஒருநாடு கூட இந்த மூன்றையும் பெற்றால் தான் பூரணத்துவம் அடைகிறது.

நவராத்திரிகள் என்றால் ஒன்பது இரவுகள் என்று பொருள்படும். இதில் முதல் மூன்று இரவுகளும் வாழ்வில் வீரத்தையும் வேண்டிய தைரியத்தையும் தரும் அன்னை துர்க்கையின் அருள் வேண்டியும் அடுத்து வரும் மூன்று தினங்களும் செல்வத்திற்கு நாயகியான மகாலட்சுமியின் அருள் வேண்டியும். இறுதி மூன்று தினங்களும் கலை ஞானத்தை அருளும் அன்னை சரஸ்வதியின் அருள் வேண்டியும் விரதம் இருக்கிறோம். இந்த ஒன்பது நாள் விரதமுடிவில் விஜயதசமியை ஆணவத்தின் மொத்த உருவமான மகிசாசுரனை அன்னை துர்க்கை அழித்ததை வெற்றிவிழாவாக கொண்டாடுகிறோம். இதன் பொருள் என்ன ? விரதம் இருப்பதன் பயன் என்ன ? நவசக்தியின் அருளோடு நமக்குள் இருக்கும் ஆணவத்தை நாம் அழித்து ஒழிப்பது தான். ஆகவே அன்னையின் அருள் துணையோடு ஆணவத்தை எம்மனத்தில் இருந்து அறுத்தெறிந்து, அன்போடும் பணிவோடும் எமது பண்பாடுகளை பேணிக்காப்பது நாம் எமது வருங்கால சந்ததிக்கு செய்யும் உன்னத சேவையாகும்.

ஓம் சிவசக்தி ஓம்

# தியானம்

அறிமுகம் -ஆரம்பம்

தியானம் என்ற சொல்லை நாம் எல்லோரும் அறிந்துள்ளோம். நம்மிற் பலர் அதன் பாலாபலன்களைக் கேள்விப்பட்டு வியக்கின்றோம். நம்மிற் சிலர் அஞ்சி நடுங்குகின்றோம் இருபகுதியினரதும் நிலையிலும் பிழை இல்லை காரணம் அவை நாம் அறிந்த ஆறுஉண்மைகள். கத்தியால் காய்கறி வெட்டிச் சமைக்கலாம் விரலை வெட்டி அவஸ்தையும் படலாம். என்ற இருபகுதி உண்மைகளையும் உண்மையின் இருபகுதிகளையும் நாம் அறிவோம். நல்லதை எண்ணித் தியானிப்பவர் அதையே பெறுவர், அல்லாதனவற்றை வேண்டித்தியானிப்பவரும் அவற்றைப்பெறுவர். தியானத்தால் தேவரும் ஆகலாம்.அசுரரும் ஆகலாம் என்பதைப் புராணங்கள் கதைகதையாக எடுத்துரைக்கின்றன.

> ''வேண்டிய வேண்டியாங்கு எய்தலால் செய்தவம் ஈண்டு முயலப் படும்'' என்பது நம் ஆசான் வாக்கு. தவம் என்ற அதிகாரமே உண்டு.

தியானம்- தவம். இச்சொற்களின் முழு அர்த்தங்களை தமிழ்மொழியில் பாண்டித்தியம் பெற்றவர்கள் முன் வந்து விளக்க வேண்டும். அவற்றைக் கேட்டு அலசி ஆராயும் வாய்ப்பு நம் எல்லோருக்கும் வேண்டும்.

''உற்றநோய் நோன்றல் உயிர்குறுகண் செய்யாமை
அற்றே தவத்திற் குரு''

உற்றநோய் நோன்றல் - இதன் அர்தத்தை மட்டும் சிறிது சிந்திப்போம் சாதாரணமாக அதற்கு ஏழுபடிகளிலும் ஏழு அர்தங்கள் உண்டு முதற் படியில் உற்றநோய் - வரும் துன்பங்களை, நோன்றல் - தாங்கிக் கொள்ளுதல், உடல் உறும் துன்பங்களைத் தாங்கித் தொடர்ந்து முயற்சிப்பது. இரண்டாம் படி ஏறும் தபசிகளுக்கு, உற்றநோய் என்பது தானாகவே தோன்றி சிதைந்து தெறிக்கும் எண்ணங்களை, நோன்றல் - திரித்து முறுக்கிக் கயிறாக்கல் இந்த இரண்டாம் படியை நாம் பின்பு விபரமாகத் தியானத்திற் பார்போம். இன்னமும் சில படிகள் ஏறியதும், பிறவி தோறும் தொடர்ந்து வந்த நோயாம் கர்மவினைகளைத் தன்வினையாக்குதல் - மேலும் படிகள் ஏறி, கடைசியாக ஏழாம்படிப்பயன் என்னவெனில் - உற்றநோய் ஆத்மாவுடன் தொடர்ந்து நிற்கும் அழியாப்பொருட்களாம் ஆணவம், கன்மம், மாயை என்ற நோயை, நோன்றல் - ஏதோ செய்வது ! அது யாருக்குத் தெரியும் ? ஏழாம் படி தபசிகளிற்குத்தான் புரியும் ! அவர்கள் சொன்னதைக் கிளிப்பிள்ளை போல் ஒப்பிப்பின், ஆத்மா பேராத்மாவுடன் இரண்டறக்கலத்தல். கடைசி நிலை அதாவது வள்ளுவர் தன் ஞானத்திற் தோன்றியதை ஏழு மாபெரும் கணணிகளிற் போட்டு, சாற்றை பிளிந்து சுருக்கி எழுதினார். அதனாற்தான் '' கடுகைத் துளைத்து ஏழு கடலைப் புகுத்திக் குறுகத் தறித்த குறள்'' எனப்புகழ்வர்.

''ஏட்டுச் சுரக்காய் கறிக்கு உதவாது'' அதனால் தியானத்தை எப்படி பழகுவது என்பதை பார்போம். இல்லத்தாராகிய நாம் இரண்டே இரண்டு தியானப் பயிற்சிகளை பழகினாற் போதும். ஒன்று பிராணத்தியானம். இரண்டாவது பொழுத்தியானம். முதலாவதின் முதற்படி மூக்கு நுனியை மட்டும் பார்பது. அவ்வளவுதான் கண்களை

வெட்டாமற் சிலபொழுது பாக்க வேண்டும். நல்லது, முதற்படியை நொடிப்பொழுதில் கற்றுவிட்டோம். ஏன் முக்கு நுனியை பார்க்க வேண்டும், அதை அறிவதற்கு அடுத்தபடியை ஏறிப்பார்ப்போம். மூக்கு நுனியை பார்தபடி மூச்சு உட்செல்கிறதா?, வெளிச்செல்கிறா?, என்பதை கவனமாக கவனித்து கணக்கிடுவது. அதற்கு வசதியாக நிமிர்ந்து இருந்து, கைகளை கூப்பி கும்பிட்டபடி, சுட்டுவிரல்களை மூக்கின் துவாரங்களின் கீழ் வைத்துகொள்ள வேண்டும் எல்லோரும் செய்து பாருங்கள்.வலது சுட்டு விரல் வலது துவாரத்திற்குக் கீழும், இடது விரல் இடது துவாரத்திற்குக் கீழும் இருக்க வேண்டும். அடுத்து அப்படியே இருக்கையில் மூச்சை ஒருமுறை வெளிவிட்டு திரும்பவும் உள் இழுக்கும் பொழுது ஒன்று என்று மனதால் எண்ண வேண்டும். அதவாது வெளிஉள் இரண்டும் சேர்ந்து ஒருமூச்சு- சிவனும்சத்தியும் சேர்ந்த ஒன்றே சிருஷ்டி போல். இப்படியாக ஒன்பதாவது மூச்சு எண்ணும் பொழுது ஒருபெரு மூச்சாக விடவேண்டும். ஒன்பதாவது வெற்றிப் பெரு மூச்சுடன் பிராணத்தியானத்தின் முதற் பிரமாணம் முடிபாகும். வசதி உள்ளவர் தினம் 12 பிரமாணங்கள் செய்யின் வாழ்விற்குப் போதுமானது. அதாவது 108 மூச்சில் உள்ள பிராணனை உணர்தல்.

பிராணன்- இது என்ன புதுச்சொல்லா? பல விதமாகக் கேள்விப்பட்ட தொன்றா? அச்சொல்லில் சிந்தனையைச் சிறிது சுழர விடுவோம். பிராணன்,பிராணவாயு என்றால் என்ன? பிராணவாயு விற்கும் மூச்சிற்கும் என்ன தொடர்பு? அசையும் பொருள் உடலாயின் அதை அசைக்கும் பொருள் பிராணனோ? அதையே சொல்லிச்சொல்லி ஏன்தான் எங்கள் பிராணனை வாங்குகிறார் இவர்? ஆகா பிராணன் என்றால் உயிரோ? உருவப்பொருளோடு அருவப்பொருள் இணையும் பொழுது அசைவு ஏற்படுகிறது! உடலோடு பிராணன் இணையும் பொழுது வாழ்வு ஏற்படுகிறது! இதில் இருந்து என்ன நிருபணம் ஆகிறது என்றால். நல்ல ஒழுங்கான வாழ்வு வேண்டுமாயின் உடலையும் பிராணனையும் ஒழுங்குபடுத்தி இணைக்க வேண்டும். அவ்வாறே எதிர்மாறாக கண்டபடி வாழவேண்டுமாயின் உடலையும் பிராணனையும் கண்டபடி கட்டுப்பாடின்றி இணைய விடவேண்டும் புராணங்களின் வருவது போல் அசுரர் ஆகவும் வேண்டாம்,தேவர் ஆகவும் வேண்டுவதில்லை, வெறும் மானிடர்க நாம்வாழ்ந்தாலே போதும் -அதுவே பிறவிப்பலனாகும்.

மறுபடியும் தியானப் பயிச்சிக்கு வருவோம் அதாவது-பார்வையை மூக்கு நுனியிற் குறிவைத்து,மனசை மூச்சுப்பிராணனில் இருத்தி, எண்ணத்தை எண்கணக்கில் திரட்டி, மூன்றையும் ஒழுங்கு ஒழுங்காக முயன்று பயில்வது. இதுவே பிராணத் தியானப்பயிற்சி.

நாம் எங்கே என்ன செய்து கொண்டிருந்தாலும் சுவாசித்தாக வேண்டும் அதனால் இப் பயிற்சியை எங்கு எப்பொழுது வேண்டுமானாலும் செய்யலாம், ஆயினும் இதை சுவாமி அறையிலும் ஆலயத்திலும் செய்வது அதிக பலனைத்தரும். அதுவும் தியானத்திற் கென சுவாமி அறையில் ஒரு ஆசனம் அமைத்து.தினந்தோறும் ஒரே இடத்தில், ஒரேஆசனத்தில் பகல் வெளிச்சம் (நேரடித் சூரிய ஒளியல்ல) பகல் வெளிச்சம் படும் வகையில்.கிழக்குஅல்லது மேற்கு முகமாய் இருந்து செய்வது மிகுந்த பலன் அளிக்கும்

ஓம் சிவசத்தி ஓம்

தொடரும்

வி.தி







# தில்லை கலாலயம்
# தயாரித்து வழங்கும்

# <u>நாட்டியஸ்வரங்கள் 2000</u>

இலையுதிர் காலத்தில் ஒரு இனிய கலை விழா.
வன்கூவர் மண்ணில் ஒரு வண்ணத்தமிழ் கலை விழா.
சதங்கை ஒலிகொஞ்சும் பரதப்பெருவிழா.
பாட்டும் பரதமும் கூட்டும் திருவிழா.

நாட்டியகுரு செல்வி. வாணி தில்லைநாதனும் அவரது தில்லை கலாலய மாணவ மாணவிகளும் இணைந்து வழங்கும் **நாட்டியஸ்வரங்கள் 2000.**




– பரதநாட்டியம் – காவடிநடனம் – கும்மிநடனம் –
– கோலாட்டம் – அம்மன் உரு ஆட்டம் – திரைஇசை நடனம் –
– இவற்றுடன் கர்நாடகஇசை – வாத்தியஇசை.

உங்கள் உள்ளங்களைக் கொள்ளை கொள்ளும் கலை நிகழ்சிகளை கண்டுகளிப்பதோடு, இதில் பெறப்படும் நிதி அனைத்தும் வன்கூவர் அருள்மிகு துர்காதேவி ஆலய கட்டிடநிதிக்கு வழங்கப்பட உள்ளது.

இடம் மைக்கல் ஜே ஃபொக்ஸ் மண்டபம் (MICHAEL J. FOX THEATRE)
7373 MACPHERSON AVE., AT KINGSWAY, BURNABY.

நேரம் மாலை 6.00 மணி

திகதி நவம்பர் 11, 2000 சனிக்கிழமை



கட்டணம் 9.00 டொலர்கள், சிறுவர்கள் 7.00 டொலர்கள் (வயது 6–12)

விபரங்களுக்கு – 876 3742, 321 3722
நன்றி. வணக்கம். தில்லை கலாலயம்.